முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் எறிபத்தநாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

19.11.2018, திங்கட்கிழமை

1. **அருந்தவராசனே அரங்கனே**
**அண்ணலே அறமிக்க வள்ளலே**
**வருந்தா உலக உயிர் காத்திடும்**
**வாழும் சித்தனே தேசிகனே**
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் **விளம்பி தேள் திங்கள்**
**ஆசிபட சூலதிகதி சோமவாரம்**
**(விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 3ம் நாள் 19.11.2018, திங்கட்கிழமை)**
**அறிவிப்பேன் ஒளி சூட்சும நூலை**
3. **நூலை எறிபத்த நாயனாரும்**
நிலவுலக பாதுகாப்பு பெற உரைப்பேன்
காலனும் இயற்கையை தூண்டி
கண்டுரைப்பேன் அழிவு செய்யாதிருக்க
4. இருக்கவே கலியுகம் வாழ் மக்களே
இனியும் காலம் கடத்தா
கருத்தாக அரங்க ஞானியின்
காலடியில் சரணடைவு கொண்டு
5. கொண்டுமே கொல்லா நெறிபட
குடும்ப சகிதமாக தருமவழிகளை
தொண்டு வழி மக்கள் ஏற்று
தேசிகனிடம் தீட்சை அடைந்து
6. அடைந்துமே அன்னதான வழி
அவரவர் பொருளுதவி செய்து
தடையற தருமபலம் பெருக்கி
தவசக்தியான சைவநெறி மீறா
7. மீறா உலகோர் வாழ்ந்திட
மேல்பதவி மக்களெல்லாம்
கறையான லஞ்சவழி சிக்கலில்
கட்டுப்படா விலகி தூய்மைபட
8. தூய்மைபட கடமை செய்ய
தொண்டென தேச நலம் காண
தூய்மைபட மக்கள் நலமும் காக்க
தொண்டு செய்ய இயற்கை இறங்கி
9. இறங்கி அருள் மழை பெய்யும்
எங்கும் பசுமை வளம் கூடும்
வறுமை எனும் கஷ்டம் விலகி
வையகமே நல் ஆளுமை பெருகும்

10. பெருகவே ஞானிகள் தயவுபட
பெரும் மாற்றம் கண்டு கலியுகம்
முருகன் ஆளும் ஞானபலமுள்ள
முழுமை ஞானயுகம் ஆகும்

11. ஆகவே அரங்கன் தலைமை
ஆறுமுகனார் தலைமை ஆகும்
யுகத்தார் இணைந்து வர சடுதி மாற்றம்
உரைத்திட்ட ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் எறிபத்த நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

அற்புதமான தவங்களை செய்து வெற்றி கண்டிட்ட அருந்தவராசனே அரங்கமகா தேசிகனே அண்ணலே எல்லையில்லா அறம் செய்திட்ட வள்ளல் ஞானியே உலக உயிர்கள் துன்பப்படாமல் உயிர்களை காத்திடும் கலியுகத்தின் வாழும் ஞானியே ஞானமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலகம் பாதுகாப்பை அடைந்திட **விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 3ம் நாள் 19.11.2018, திங்கட்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே எறிபத்த நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் எறிபத்தநாயனார்.

காலதேவனாகிய எமபெருமானும் இயற்கையைத் தூண்டி உலகினில் அழிவுச் செயல்களை செய்யாதிருக்க வேண்டுமெனில், துன்பம்மிக்க கலியுகத்தினில் வாழும் மக்களே இனியும் காலம் தாழ்த்தாமல் கருத்துடன் ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானியின் திருவடியில் சரணடைவு கண்டு பயபக்தியுடன் பணிந்து நடந்து பக்தி செய்து அரங்கன் கூறும் உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து, கொல்லா நெறியில் குடும்பத்தின் உறுப்பினர்களையும் நடந்திட செய்து தருமத்தின் வழிகளை ஏற்று உலக மக்களுக்கு தொண்டுகளை செய்து வருவதுடன் அவரவரின் ஞானஅறிவும் பெருகிடவே ஆறுமுக அரங்கமகா தேசிகனாரிடத்து தீட்சை உபதேசம் அடைந்து அரங்கன் உலக உயிர்களுக்கு செய்கின்ற அற்புத செயலான அன்னதானப்பணிகளுக்கு பொருளுதவிகள் செய்து அவரவரின் தருமபலத்தினை தடையின்றி பெருக்கிட வேண்டும்.

தவம் செய்வதற்கு ஒப்பான, சைவநெறியில் இருந்து மீறாமல் உலக மக்கள் வாழ்ந்திட வேண்டும். உயர்பதவியினை வகிப்போர் லஞ்சலாவண்ய செயல்களில் ஈடுபடாமல் கட்டுப்பாடாய் நடந்து கொண்டு தீயவழிகளில் இருந்து விலகி தூய்மைபட அவரவரின் கடமைகளைச் சரிவர செய்திட வேண்டும். தேசத்தின் நலனை காக்கும் பொருட்டு அவரவரும் கடமையை தன்னலமற்று தொண்டாய் செய்து மக்களின் நலனை பாதுகாத்திட வேண்டும்.

இவ்வுலகமே தூய்மையுடன் செயல்பட மக்கள் சைவநெறி மீறாதிருக்க இயற்கையும் மகிழ்ந்து அருள்மழை பொழியும், எங்கும் பசுமை வளம் கூடிடும். வறுமை என்கிற கஷ்டமான சூழ்நிலைகள் எல்லாம் விலகி உலகம் முழுதும் நல்லாட்சி உருவாகும்.

தருமம் பெருக பெருக, உலகினில் ஞானிகளின் தயவு பெருகிடும். உலகம் ஞானிகளின் தயவினால் பெரும் மாற்றத்தை அடைந்து இந்த துன்பம்மிக்க கலியுகம் மாற்றம் அடைந்து ஞானபண்டிதன் முருகப்பெருமான் ஞானஆட்சி செய்கின்ற ஞானயுகமாக ஆகிடும்.

ஆதலினால் உலக மக்களே ஆறுமுக அரங்கமகா தேசிகனின் தலைமையை ஏற்று பின் தொடர்ந்திடுங்கள். அரங்கமகா தேசிகனாரின் தலைமை முருகப்பெருமானின் தலைமை ஆகும். உலகோர் அரங்கனுடன் இணைந்து செயல்பட உலகில் விரைந்து உலகப்பெருமாற்றம் உருவாகிடும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் எறிபத்தநாயனார்.

–சுபம்–